முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜனக்குமாரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.04.2019, திங்கட்கிழமை

1. **வரம் தரும் அரங்கனே வாழ்க**
**வளம் தரும் தேசிகனே வாழ்க**
**தரமான தொண்டர் படைகளை**
**தயவை கொண்டு உருவாக்கும் ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் நித்ய பிரசன்ன ஆசி
இனிமைபட **விகாரி தகரின் திங்கள்**
**ஈராம் திகதி சோமவாரம் தன்னில்**
**(விளம்பி வருடம் சித்திரை மாதம் 2ம் நாள் 15.04.2019, திங்கட்கிழமை)**
3. **தன்னிலே ஜனக்குமாரர் யானும்**
தவராசனுக்கு உலக நலமுற உரைப்பேன்
அன்னதானமெனும் மகா சேவையை
அகிலமெங்கும் வியக்க செய்து வருகின்ற
4. வருகின்ற அரங்க மகானின்
வலுவான தரும சேவைக்கு
ஆறுதல் தந்து உலக மக்கள்
அரங்கன் தலைமை ஏற்று வர
5. வருவதுடன் பொருளுதவி செய்து
வல்லமைபட தொடர்ந்து வருக
முருகா எனும் செபதபமுடன்
முழுமதி பூசை கலந்து வருதலுற
6. வருகவே மக்களிடை குருவருள்
வடிவேலன் சக்தியாக பரவியே
மாறுதலும் சகல வளங்களும்
மகத்துவமும் ஞானபலமும் பெற்று
7. பெற்றுமே அரங்க ஞானி உபதேச
பெருமைமிகு ஞான வழிகளை
ஏற்றுவர அழியாமை எனும்
இணையில்லா நிலைபெற்று சிறப்பர்
8. சிறப்பு தரும் வாழ்வை தந்து
சேவை வழி மக்கள் திளைக்க
மறுப்பிலா உண்மை ஆன்மீகம்
மக்களை அழைத்து தருகின்ற

9. தருகின்ற அரங்கன் திருவடியை
தவமாக எண்ணி வணங்கி
பெருமைபட அரங்கனிடம் தீட்சை
பிசகில்லா ஏற்று உலக மக்கள்

10. மக்களெல்லாம் சரவண சோதி ஏற்றி
மகான் அரங்கன் வழியே
தேக்கமிலா உயர் வழி என்று கருதி
தொடர்ந்து உலகமெங்கும் பரப்பி

11. பரப்பி வழிபாடு செய்வதுடன்
பரோபகாரம் பெருக்கி வர
தரணியே ஞான பலம் பெறும்
தாமுரைத்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக்குமாரர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

தம்மை நாடி வந்து வரம் கேட்கும் மக்களுக்கு எல்லாம் வரம் தந்து வாழவைக்கும் மகாஞானி ஆறுமுக அரங்கனே வாழ்க வாழ்க. எல்லா வளங்களையும் மக்களுக்கு தந்தருளும் ஞானதேசிகனே வாழ்க வாழ்க. பண்பும் தயவும் உடைய பண்புள்ள தொண்டர் படைகளை தயவு உணர்வால் படைத்து இவ்வுலகை காக்கின்ற மகா ஞானியே அரங்கா அற்புதமான உனது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 2ஆம் நாள் 15.04.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஜனக்குமாரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஜனக்குமாரர்.

உலக உயிர்களை காக்கின்ற மக்களை வருத்தும் பசிப்பிணியை போக்குகின்ற அன்னதானம் என்கிற மகா சேவையை உலகமெங்கும் உலகமே வியக்குமாறு அளவிலாது செய்து வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வலிமைமிக்க தொண்டுகளுக்கு தான தர்மப் பணிகளுக்கு ஆறுதல் தரும் விதமாக உலக மக்கள் எல்லாம் பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் அரங்கன் தலைமையை ஏற்றுக்கொண்டு அரங்கமகா தேசிகனாரை வழுவாது பின் தொடர்ந்து வர வேண்டும்.

அரங்கனைப் பின் தொடர்ந்து வருவதுடன், முருகா முருகா முருகா என்றே ஞானத்தலைவன் முருகப்பெருமானின் நாமங்களை நாமஜெபமாக தொடர்ந்து ஜெபித்து வருவதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலன் கருதி நடத்துகின்ற ஞான பூசையாம் பௌர்ணமிதோறும் நடத்துகின்ற சித்தர்கள் சிறப்பு ஞான பூசைகளில் கலந்துகொண்டு அரங்கனின் அருளாசிகளை பெற்று வரவேண்டும்.

பௌர்ணமி பூசைகளிலே கலந்துகொள்ளும் மக்களுக்கு குருவருள் சக்தியானது முருகப்பெருமானின் சக்தியாக பரவி அவர்களது வாழ்வினிலே சகல வளங்களையும் பெருக்குவதோடு மகத்துவங்களையும் உருவாக்கி ஞான பலத்தினையும் பெறுவார்கள்.

அரங்கனின் ஆசிபெற்றிட்ட அவர்கள் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உபதேச வழிகளை ஏற்று பெருமைமிக்க ஞான வழிகளை ஏற்று பின்பற்றி வரவர, அழிவிலாமை எனும் மரணத்தையும் வெல்லுகின்ற இணையற்ற பெரும் நிலையினை பெற்று சிறப்படைவார்கள்.

சிறப்புமிக்க வாழ்வினை தந்து தொண்டுகள் மூலமாக மக்கள் கடைத்தேறிட வழிவகை செய்து, மறுக்க முடியாத உண்மை ஆன்மீக நெறிக்கு மக்களை அழைத்து வரம் தருகின்ற உத்தம மகா ஞானி அரங்கனின் திருவடிகளை அவரவரும் பெறுதற்கரிய பெரும்பேற்றை பெற்றதாக எண்ணி திருவடி வணங்குதலை தவமாக எண்ணி பெருமையுடனும் பக்தியுடனும் பணிந்து வணங்கி அரங்கமகானிடத்து தீட்சை உபதேசங்களை பெற்று அரங்கரின் தீட்சை உபதேசப்படி நடந்து வழுவாது பின் தொடர்ந்திட வேண்டும்.

அரங்கனின் உபதேசப்படி அரங்கனை வழுவாது பின்தொடர்கின்ற மக்கள் எல்லாம் சரவண ஜோதியாகிய முருகப்பெருமான் வெளிப்படும் சக்திமிக்க ஜோதி வழிபாட்டினை மகான் ஆறுமுக அரங்கன் திருவடி பற்றி இதுவே நமக்கு கிடைத்த உண்மை, உயர் ஞானவழி என உளமார ஏற்றுக்கொண்டு பயபக்தியுடன் வழிபடுவதோடு உலகமெங்கும் முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாட்டினை பரப்பி மக்களெல்லாம் வழிபாடுகள் செய்திட செய்து, உலகமெங்கும் பரோபகார செயல்களை செய்து ஜீவ தயவை உலகமெங்கும் பெருக்கி வர வேண்டும். இவ்விதமே செயல்பட செயல்பட உலகமெங்கும் ஞானபலம் பெருகிடும், உலகமே மாறி ஞான உலகமாக ஆகிவிடும் என கூறுகிறார் மகா ஜனக்குமாரர்.

–சுபம்–